**SC NO. 19/2013      Date:09.01.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திரு. கன்னியப்பன் என்ற **Pw5** நபரின் வாக்குமூலம் (**1876** ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachaiyappan,** இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் - திரு. கன்னியப்பன்

க/பெ, - திரு. அருணகிரி

வயது - **45**

தொழில் - விவசாயம்

முதல் விசாரணை

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் வெண்பாக்கம் வட்டம் தூசி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார் **10** வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் காஞ்சிபுரத்திற்கு மருத்துவமனைக்கு வந்தேன். காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னிடம் கையொப்பம் போடசொன்னார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள **2** வது கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.**2**. . என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள **2** வது கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ.**3** ஆகும். போலிசார் விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி இந்நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

கடந்த **7.8.2009** அன்று பகல் சுமார் **2.30** மணிக்கு காஞ்சி தாலுகா காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடமான பொன்னேரிகரை புதிய ரயில்நிலையம் அருகில் உள்ள இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் ஒரு மாதிரிவரைபடம் தயாரித்ததாகவும் அந்த பார்வை மகசரில் நானும் குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் சம்பவ இடத்திலிருந்து சேதமடைந்த அம்புலென்சு வேனின் உடைந்த கண்ணாடி துண்டுகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் அதிலும் நானும் குமாரும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை இல்லை.